


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351




சனி ❖ ஜுன். 03, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 239 ❖ ரூ.10

### பொறியியல் மாணவர் கோகுல்ராஜ் ஆணவக் கொலை வழக்கில்

# சாகும்வரை சிறை

## தீரன் சின்னமலை கவுண்டர் பேரவை நிறுவனர் யுவராஜ் உள்ளிட்ட 10 பேருக்கு வழங்கப்பட்ட ஆயுள் தண்டனையை உறுதிசெய்தது சென்னை ஐகோர்ட்

**சென்னை, ஜூன். 3-**

**பொறியியல் மாணவர் கோகுல்ராஜ் ஆணவக் கொலை வழக்கில் யுவராஜ் உள்ளிட்ட 10 பேருக்கு மதுரை வன்கொடுமை தடுப்பு நீதிமன்றம் விதித்த ஆயுள் தண்டனையை உறுதி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**





சேலம் மாவட்டம் ஓமலூரைச் சேர்ந்த கல்லூரி மாணவா். கோகுல்ராஜ். இவா் கடந்த 2015-ம் ஆண்டு நாமக்கல் மாவட்டம் தொட்டிபாளையம் பகுதியில் ரெயில் தண்டவாளத்தில் பிணமாககிடந்தாா்.அவர் காதல் விவகாரத்தில் ஆணவக்கொலை செய்யப்பட்டதாக புகார்கள் எழுந்தன. இதையடுத்து இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தினர். பின்னர் இந்த விவகாரம் விஸ்வரூபம் எடுத்ததால், கோகுல்ராஜ் இறப்பு விவகாரம் குறித்த வழக்கு சி.பி. சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றப்பட்டது.

அவர்கள் விசாரணைக்கு பின்பு, இது தொடர்பாக சங்ககிரியை சோ்ந்த தீரன் சின்னமலை கவுண்டர் பேரவை நிறுவனர் யுவராஜ், அவரது கூட்டாளிகள் உள்பட 17 போ் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. தொடக்கத்தில் நாமக்கல் மாவட்ட கோர்ட்டில் விசாரிக்கப்பட்ட இந்த கொலை வழக்கு, சென்னை ஐகோர்ட்டு உத்தரவின் பேரில் மதுரை மாவட்ட சிறப்பு கோர்ட்டுக்கு மாற்றப்பட்டது. இங்கு 2 ஆண்டுகளாக விசாரிக்கப்பட்டு வந்தது. இதற்கிடையே இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த ஜோதிமணி என்பவர் கொலை செய்யப்பட்டார். அமுதரசு என்பவர் தலைமறைவாக இருந்து வந்தார். இதனால் அவர் மீதான வழக்கு மட்டும் நாமக்கல் கோர்ட்டில் நிலுவையில் உள்ளது.

இந்த வழக்கின் அனைத்து தரப்பு விசாரணையும் முடிவடைந்து கடந்த ஆண்டு மார்ச் மாதம் தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதன்படி இந்த வழக்கில் கைதானவர்களில் 10 பேர் குற்றவாளிகள் என்றும், 5 பேரை விடுதலைசெய்தும் மதுரை மாவட்ட சிறப்பு கோர்ட்டு தீர்ப்பளித்தது. இந்த வழக்கின் முதல் குற்றவாளியான யுவராஜுக்கு 3 ஆயுள் தண்டனையும், அருண், குமார் என்ற சிவகுமார் (43), சதீஷ்குமார் (33), ரகு என்ற ஸ்ரீதர் (29), ரஞ்சித் (29), செல்வராஜ் (39) ஆகியோருக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், சந்திரசேகரனுக்கு (51) ஒரு ஆயுள் தண்டனையும், பிரபு (41), கிரிதர் (30) ஆகிய இருவருக்கு மட்டும் ஆயுள் தண்டனையுடன் 5 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது.

மேலும் அவர்கள் அனைவரும் சாகும் வரை சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி சம்பத்குமார் தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார். இந்த தீர்ப்பு தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த 10 பேரும் மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். பின்னர் ஓரிரு நாட்கள் கழித்து முக்கிய குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட யுவராஜ் மட்டும் கோவை சிறைக்கு மாற்றப்பட்டார். இந்த தீர்ப்பை எதிர்த்து யுவராஜ் உள்ளிட்ட 10 பேரும் மதுரை ஐகோர்ட்டில் மேல்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்தனர். அந்த மனுக்களை விசாரித்த ஐகோர்ட்டு நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், ஆனந்த்வெங்கடேஷ் ஆகியோர், இந்த வழக்கில் பிறழ்சாட்சியாக மாறிய சுவாதியை நேரில் வரவழைத்து விசாரித்தனர்.

அப்போது அவர் கோகுல்ராஜ் கொலைக்கும் தனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் கோகுல்ராஜ் தன்னுடைய வகுப்பு தோழர் மட்டும்தான். வேறு எந்த தொடர்பும் இல்லை என்றும், வாக்குமூலம் அளித்தார். அவர் முன்னுக்குப்பின் முரணான பதில் அளித்ததாக கூறி, அவர் மீது கோர்ட்டு அவமதிப்பு வழக்குபதிவு செய்ய மதுரை ஐகோர்ட்டு நீதிபதிகள் உத்தரவிட்டனர். மதுரை ஐகோர்ட்டின் இந்த நடவடிக்கையை ரத்து செய்ய வேண்டும் என்று சுவாதி தரப்பில் சுப்ரீம் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி ஆனது. இதற்கிடையேதண்டனை பெற்றவர்கள் சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்களை விசாரித்த நீதிபதிகள், அதன் மீதான தீர்ப்பை ஒத்தி வைத்திருந்தனர்.

இந்நிலையில் இந்த வழக்கு தொடர்பான விசாரணை நேற்று பிற்பகலில் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து தீர்ப்பை வாசித்த நீதிபதிகள் கூறுகையில், கோகுல்ராஜ் கொலை வழக்கில் குற்றச்சாட்டு நிரூபணமாகி உள்ளது. சிறப்பு நீதிமன்ற தீர்ப்பில் எந்த பிழையும் இல்லை. யுவராஜ் உள்ளிட்ட 10 பேருக்கு ஆயுள் தண்டனை உறுதி செய்யப்படுகிறது. மேலும் 5 பேர் விடுதலையில் தலையிட வேண்டிய அவசியமில்லை என்றும் யுவராஜ் வாழ்நாள் முழுவதும் சிறையில் இருக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர். ஆயுள் தண்டனையை எதிர்த்து யுவராஜ் உள்ளிட்ட 10 பேர் தாக்கல் செய்த மேல்முறையீடு வழக்கில் சென்னை ஐகோர்ட்டு நீதிபதிகள் அதிரடி தீர்ப்பளித்துள்ளனர்.

## “கருணாநிதி என்ற பெயரை சொன்னால் ஜப்பானில் கை தட்டுகிறார்கள்..!” – முதல்வர் மு.க.ஸ்டாலின்

**சென்னை , ஜூன். 3-**



முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, சென்னை கலைவாணர் அரங்கில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கருணாநிதியின் வாழ்க்கை வரலாற்று புகைப்பட கண்காட்சியினை முதலமைச்சர் பார்வையிட்டார். அப்போது விழாவில் மேற்கு வங்க மாநில முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி, மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, அமைச்சர்கள் துரைமுருகன், திமுக நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர். பாலு, கே.என். நேரு, ஐ.பெரியசாமி, எ.வ.வேலு, சாமிநாதன், செந்தில்பாலாஜி ராஜகண்ணப்பன், உள்ளிட்ட அமைச்சர்கள், நாடாளுமன்றசட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

கலைவாணர் அரங்கில் நடைபெறும், நிகழ்ச்சியில் கலைஞர் கருணாநிதியின் நூற்றாண்டு விழா இலச்சினையை வெளியிட்டு முதலமைச்சர் மு க ஸ்டாலின் உரையாற்றினார்.

அப்போது, “ நாங்கள் திராவிட இயக்கத்தை சார்ந்தவர்கள் என்றாலும் காந்தியடிகள் இயக்கத்துடன் எங்களுக்கு தொடர்பு உண்டு என்பதை அறிந்தவர் கோபாலகிருஷ்ண காந்தி. பெரியார் சுயமரியாதை இயக்கத்தை தொடங்கும் முன்பு காங்கிரசில் காந்தியின் தொண்டராக இருந்தார். கோட்சேவால் மாகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்டபோது பெரியார் மன வேதனை அடைந்தார்.

பெரியார், அண்ணா, கருணாநிதி மீது மதிப்பு கொண்டவர் கோபாலகிருஷ்ண காந்தி. கோபாலகிருஷ்ண காந்தி இங்கு வந்து பேசியது என் வாழ்நாளில் கிடைத்துள்ள மாபெரும் பேறு , அந்த பெயரை காப்பாற்றும் வகையில் நான் நடந்துகொள்வேன்.

தமிழ் மொழிக்கு உயிராக இருந்தவர் உதயமான நாள் நாளைய தினம். என் தலைமையலான திராவிட மாடல் அரசை கருணாநிதிக்கும் , கருணாநிதியின் புகழுக்கும் காணிக்கையாக்குகிறேன். நவீன தமிழகத்தின் சிற்பி கருணாநிதி , அவர் தொடாத துறைகளே இல்லை, அவர் போட்டு தந்த பாதையிலே அனைத்து துறைகளும் செயல்படுகிறது. சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களில் அதிக தொழில் நிறுவனங்கள் உருவாக காரணம் கருணாநிதி. திராவிட மாடல் அரசு தொழில் புரட்சியை உருவாக்கி வருகிறது” என்றார்.

அதனைத்தொடர்ந்து பேசியவர், எனது சிங்கப்பூர் , ஜப்பான் பயணத்தில் 3233 கோடி மதிப்பிலான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. தமிழகம் , திமுக அரசு மீது அவர்கள் நல்ல மரியாதையை வைத்துள்ளனர். இந்தியாவில் முதலீடு செய்வதாக இருந்தால் தமிழகத்தில்தான் தொழில் தொடங்குவோம் என அவர்கள் கூறியுள்ளனர். ஜப்பானில் கருணாநிதி பெயரை சொன்னாலே அங்கிருக்கும் தமிழ் மக்கள் கைதட்டுகின்றனர். கருணாநிதி நூற்றாண்டுக்கான குழு விரைவில் அமைக்கப்படும்” என்றார்.






புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் அரங்குலலிங்கம் பெரியநாயகி அம்பாள் நற்பணி இயக்கம் சார்பில் நடைபெற்ற அரசு திருவரங்குளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு, 11ஆம் வகுப்பு 12ஆம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற தல மூன்று மாணவ, மாணவிகளுக்கு கல்வி பரிசளிப்பு விழா தமிழ்நாடு சட்டம் மற்றும் சிறைத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெற்றது. அஞ்சுகா மீனாட்சி சுந்தரம் திருவரங்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் மகேஸ்வரி ஆறுமுகம் ஒன்றிய கவுன்சிலர் சிதம்பரம், முன்னாள் பூவரசகுடி ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடாஜலபதி, முன்னாள் ஊராட்சித் தலைவர் கருப்பையா, முன்னாள் கவுன்சிலர் ஆறுமுகம், திமுக மாவட்ட பிரதிநிதி வீர.மெய்யர், காயாம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் செல்வி ராமதாஸ், வழக்கறிஞர் சிவா, மேட்டுப்பட்டி சிவசக்தி, பாண்டி, நாடி அம்பாள்,குமார், ஜெகநாதன், சர்வேயர், துரைராஜ் ,திருமேனி உள்பட பலரும் கலந்து கொண்டனர் நற்பணி இயக்கநிர்வாகி முருகேசன் அனைவரையும் வரவேற்று பேசினார் ராஜ்குமார் நன்றி கூறினார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

உன்னை வீழ்த்தும் அளவிற்கு
விதிகள் எழுதப்பட்டிருந்தால்,
விதிகளை வீழ்த்தும் அளவிற்கு
வழிகளும் நிறுவப்பட்டிருக்கும்!
தளறாதே!
துணிந்து செல்!




## புதுக்கோட்டை மாவட்டம் நச்சாந்துப்பட்டியில் புதிய மின்மாற்றியினை சட்டத்துறை அமைச்சர் துவக்கி வைத்தார்



புதுக்கோட்டை, ஜூன்.3–

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் ஊராட்சி ஒன்றியம், நச்சாந்துப்பட்டி மலையலிங்கபுரத்தில், புதிய மின்மாற்றியினை, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி நேற்று(02.06.2023) துவக்கி வைத்தார், பின்னர் அவர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்களின் நலனுக்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார், அந்தவகையில் மின்விநியோகம் சீராக தேவைப்படும் இடங்களில் புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு மின்விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி ரூபவ் இன்றையதினம் நச்சாந்துப்பட்டி மலையலிங்கபுரத்தில் புதிய மின்மாற்றி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

நச்சாந்துப்பட்டி மின்வாரிய அலுவலகத்திற்குட்பட்ட உயர்நிலை நீர்த்தேக்க தொட்டி மின்விசை கூடுதல் மோட்டார் பம்பு அமைப்பதற்கு மின்வாரியத்தால், புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மலையலிங்கபுரம் அதனை சுற்றியுள்ள 150 வீடுகள், நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் இதர தொழிலகங்களுக்கு நிறைவான மின் அழுத்தம் வழங்கப்படும்.

எனவே பொதுமக்கள் அனைவரும் மின்சாரத்தினை நல்ல முறையில் பயன்படுத்திட வேண்டும் என

சட்டம் ரூபவ் நீதிமன்றங்கள் ரூபவ் சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், செயற்பொறியாளர் எம். ஆனந்தாய், உதவி செயற்பொறியாளர் ராமநாதன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## கோயம்புத்தூரில் மணமக்களுக்கு திருமண பரிசாக குவிந்த 1600 புத்தகங்கள்– மலைவாழ் மாணவர்களுக்கு வழங்க ஏற்பாடு



கோவை, ஜூன்.2–

திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு வந்த உறவினர்கள் மற்றும் நண்பர்கள் 400-க்கும் மேற்பட்ட புத்தகங்களை வழங்கினர். பார்சல் மூலமாக 1,200 புத்தகங்கள் என மொத்தம் 1,600 புத்தகங்களை அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வழங்கினர்.

கோவைபெரியக்கடை வீதியை சேர்ந்தவர் ஜவகர் சுப்பிரமணியம். புளி வியாபாரி. சமூக ஆர்வலரான இவர் குளங்கள் தூர்வாருதல், மரம்நடுதல்உள்ளிட்டவை குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார். ஜவகர் சுப்பிரமணியம் அவரது மூத்த மகள் சுவர்ண பிரபாவுக்கு திருமணம் செய்து வைப்பதற்கான ஏற்பாடுகளை செய்தார். திருமண அழைப்பிதழ் அச்சடிக்கும்போது அதில் திருமண நிகழ்ச்சிக்கு வரும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் பணமோ, பொருளோ தர வேண்டாம். அதற்கு மாற்றாக 10-ம் வகுப்பு மற்றும் பிளஸ்-2 மாணவர்கள் பயன்பெறும் வகையில் புத்தகங்களை பரிசாக வழங்குங்கள் என அச்சடித்து அழைப்பிதழ் கொடுத்தார்.

கடந்த புதன்கிழமை மாலை ராம்நகரில் உள்ள மண்டபத்தில் ஜவகர் சுப்பிரமணியத்தின் மகள் சுவர்ண பிரபா- விக்ரம் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது. மண்டபத்தில் புத்தகம் பெறுவதற்கு என தனியாக அரங்கு அமைக்கப்பட்டு இருந்தது. திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு வந்த உறவினர்கள் மற்றும் நண்பர்கள் 400-க்கும் மேற்பட்ட புத்தகங்களை வழங்கினர். மேலும் பார்சல் மூலமாக 1,200 புத்தகங்கள் என மொத்தம் 1,600 புத்தகங்களை அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வழங்கினர். இந்த புத்தகங்கள் மாணவர்கள் பயன்பெறும் வகையில் 10-ம் வகுப்பு மற்றும் பிளஸ்-2 பாட புத்தகங்கள், வரலாற்று புத்தகங்கள், தேர்வுகள் எதிர்கொள்ளும் வகையிலான புத்தகங்கள், கவிதை, இலக்கணம் தொடர்பான புத்தகங்கள் வழங்கப்பட்டு இருந்தது. இந்த புத்தகங்களை ஜவகர் சுப்பிரமணியம் கலெக்டரின் அனுமதி பெற்று ஆனைகட்டி, வால்பாறை உள்ளிட்ட மலைவாழ் பகுதியில் வசிக்கும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் வழங்கப்போவதாக தெரிவித்து உள்ளார்.




## மல்யுத்த வீராங்கனைகளின் பாலியல் குற்றச்சாட்டு பாஜக எம்பி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி ஆர்ப்பாட்டம்



புதுக்கோட்டை, ஜூன்.3–

பாலியல் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பாஜக எம்பி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி புதுக்கோட்டையில் மாதர் சங்கம், வாலிபர் சங்கம், மாணவர் அமைப்புகளின் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மல்யுத்த வீராங்கனைகள் வினஷ், போகல், மல்லிக், பஜிரங் புனியா ஆகியோர் தங்கள் மீது பாலியல் துன்புறுத்தல் செய்ததாக பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் பிரிஜ் பூஷன் சரன் சிங் மீது கடந்த ஜனவரி 18 ல்குற்றம் சாட்டினர். இந்தப் புகாரின் அடிப்படையில் டில்லி போலீசார் முறையான நடவடிக்கை எடுக்கவில்லை எனக்கூறி மல்யுத்த வீரங்கனைகள் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்நிலையில், பாதிக்கப்பட் மல்யுத்த வீராங்கனைகள் மீதே காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில், பாலியல் குற்றம் சுமத்தப்பட்ட பாஜக எம்பியை பதவி நீக்கம் செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மல்யுத்த விராங்கனைகள் மீதான வழக்கைத் திரும்பப்பெற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைளை வலியுறுத்தி அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம், இந்திய மாணவர் சங்கம் ஆகிய அமைப்புகளின் சார்பில் நேற்று புதுக்கோட்டை தலைமை தபால் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாதர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் பி.சுசீலா தலைமை வகித்தார், வாலிபர் சங்க மாவட்டச் செயலாளர் ஆ.குமாரவேல், மாணவர் சங்க மாவட்டச் செயலாளர் எஸ்.ஜனார்த்தனன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், நிர்வாகிகள் டி.சலோமி, எஸ்.பாண்டிச்செல்வி, எஸ்.சந்தோஷ்குமார், எம். மகாலெட்சுமி, முத்துமாரி, டேவிட், தோழமைச் சங்க நிர்வாகிகள் ஆர். சோலையப்பன், ஆர். சுப்பிரமணியன், என். ராமச்சந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## அனைத்து அரசுப் பள்ளிகளிலும் 9–ந் தேதி பள்ளி மேலாண்மை குழுக் கூட்டம் நடத்த வேண்டும்

### தமிழக அரசு உத்தரவு



சென்னை, ஜுன். 3–

அனைத்து அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக்குழு கூட்டத்தை வருகிற 9-ந் தேதி நடத்த வேண்டும் என்று பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குனர் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இந்த கல்வி ஆண்டில் பள்ளி இடைநிற்றல் இல்லாமல் மாணவர்கள் தமது படிப்பை தொடர்வதையும், அனைத்து வகை அரசு பள்ளிகளிலும் குழந்தைகள் தடையின்றி சேர்க்கப்படுவதையும், பள்ளி மேலாண்மை குழு கூட்டத்தில் கலந்தோசித்து மாணவர் சேர்க்கையை உறுதிப்படுத்த வேண்டும்.

பள்ளியின் அருகில் உள்ள வீடுகளில்யாரேனும் மாற்றுத்திறன் குழந்தைகள் பள்ளியில் சேராமல் இருப்பது தெரிந்தால் அக்குழந்தையின் பெற்றோரை மேலாண்மை குழுவினர் சந்தித்து பள்ளியில் சேர்க்க ஊக்குவிக்க வேண்டும். சிறப்பு பயிற்சி வகுப்பு நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும். துணைத் தேர்வு எழுத உள்ள மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி வழங்குதல் 'இல்லம் தேடி கல்வி' திட்டத்தை தொடருதல் உள்ளிட்டவை குறித்து இதில்விவாதிக்கவேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது. கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளின் அடிப்படையில் கற்றல், கற்பித்தல் பணிகளை தொடர வேண்டும் என்று கூறப்பட்டு உள்ளது.

## வாழ்வாதாரக் கோரிக்கைகளை முன்வைத்து விராலிமலையில் சிபிஎம் ஆர்ப்பாட்டம்



புதுக்கோட்டை, ஜூன்.3–

மக்களின்வாழ்வாதாரக் கோரிக்கைகளை முன்வைத்து புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

விராலிமலையில் வசிக்கும் அனைத்துக் குடும்பங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட காவிரி குடிநீர் வழங்க வேண்டும், குடிமனைப் பட்டா இல்லாத அனைத்து ஏழைக் குடும்பங்களுக்கும் இலவச மனைப்பட்டா வழங்க வேண்டும். மலம்பட்டி, ஆம்பூர்பட்டி கிராமங்களில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வரும் ஏழை மக்களுக்கு வகைமாற்றம் செய்து பட்டா வழங்க வேண்டும், விராலிமலையில் பழுதடைந்துள்ள நூலக கட்டிடத்திற்குப் பதிலாக புதிய கட்டிடம் கட்டித்தர வேண்டும். பழுதடைந்துள்ள சாலைகளை செப்பணிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

விராலிமலை சுங்கச்சாவடி அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் ஒன்றியச் செயலாளர் ஆர். மகாலிங்கம் தலைமை வகித்தார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் கே. சண்முகம் சிறப்புரையாற்றினார். கோரிக்கைகளை விளக்கி ஒன்றியக்குழு உறுப்பினர்கள் எஸ்.ஆனந்த், ஏ.இருதயம், ஏ.சிவக்குமார், ராஜா உள்ளிட்டோர் பேசினர், ஆர்ப்பாட்த்தில் ஏராளமானோர் பங்கேற்றனர்.



மதுரை மாவட்டம், வடக்கு தாலுகா, மாராணி வாரியேந்தல் கிராமத்தில் அமைந்து அருள் பாலிக்கும் மந்தை விநாயகர் திருக்கோவில் நூதன ஆலய அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேக விழா எனும் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற்றது. இவ்விழாவை முன்னிட்டு சிறப்பு சுவாமி அலங்காரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் இவைகளை நான்கு மரியாதைக்காரர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் இவ்விழாவை சிறப்பித்தனர்.

## தஞ்சாவூரில் வாக்கி டாக்கி மூலம் தகவல் பறிமாறி மதுபானம் விற்பனை செய்த 6 பேர் கைது



தஞ்சாவூர், ஜூன். 3–

திருவிடைமருதூர் வட்டம், திருப்பனந்தாளில் வாக்கி டாக்கிகள் மூலம் தகவல் அளித்து, டாஸ்மாக் மதுபானம் விற்பனை செய்த 6 பேரை போலீஸார் கைது செய்து அவர்களிடமிருந்து 3 வாக்கி டாக்கிகள், 2 இரு சக்கர வாகனங்களைப் பறிமுதல் செய்துள்ளனர்.

திருப்பனந்தாள் பகுதியில் இரவு 10 மணி முதல் மதியம் 12 மணி வரை அனுமதியின்றி டாஸ்மாக் மதுபானம் விற்பனை செய்து வருவதாக போலீஸாருக்கு ரகசிய தகவல் வந்தது. இதனையடுத்து, போலீஸார் விற்பனை செய்யும் இடத்திற்குச் செல்லும்போது, அவர்கள் தப்பியோடினர். இதனையடுத்து போலீஸார், இது குறித்து மேலும் விசாரணை செய்த போது, அவர்கள் குழுவாக வாக்கி டாக்கிகள் மூலம் போலீஸார் தகவலறிந்து வருவதை தெரிவித்து மதுபானத்தை விற்பனை செய்தும், தப்பியோடி வந்ததும் தெரிய வந்தது.

இதனைத் தொடர்ந்து, ஜாபர்சித்திக் தலைமையில் போலீஸார், ரகசிய கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, போலீஸார் நடமாட்டத்தை, அங்கிருந்த ஒருவர், சிறுவர்கள் விளையாடும் வாக்கி டாக்கி மூலம் அருகிலுள்ளவருக்கு தகவல் அளிப்பதும், தொடர்ந்து அவர்களுக்குள் ஒருவருக்கொருவர் தகவல் பறிமாறிக்கொண்டதும் தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து, போலீஸார் அவர்களைக் கண்காணித்துச் சென்றபோது, திருப்பனந்தாள், மண்ணியாற்றின் அருகில் பதுங்கியிருப்பது தெரிய வந்தது.


பின்னர் அங்கிருந்த அதே பகுதியைச் சேர்ந்த சச்சுவாணன் (26), கணேசன்(46), ஆறுமுகம் (30), சேகர்(63), சசிகுமார் (40), ரவி (55) ஆகிய 6 பேரை போலீஸார் கைது செய்து, அவர்கள் பயன்படுத்திய 3 வாக்கி டாக்கிகள், 2 இரு சக்கர வாகனத்தைப் பறிமுதல் செய்து, விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## அடுத்த வாரம் பள்ளிகள் திறப்பு நோட்டு புத்தகங்கள் விலை 10 சதவீதம் உயர்ந்தது, கைடு விலையும் அதிகரிப்பு

நெல்லை, ஜூன். 3–

அடுத்த வாரம் பள்ளிகள் திறக்கப்பட உள்ள நிலையில் நோட்டு புத்தகங்கள் விலை கடந்த ஆண்டைவிட 10 சதவீதம் உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் கோடை விடுறைக்கு பிறகு வருகிற 7ம் தேதி பள்ளிகள் திறக்கப்பட உள்ளன. இதையடுத்து பள்ளிகளில் புதிதாக மாணவர் சேர்க்கை பணிகள், தற்போது மும்முரமாக நடைபெறுகின்றன. மேலும் பள்ளி திறக்கும் நாளில் மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்கள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. அதேபோல் மாணவர்களுக்கு தேவையான நோட்டு புத்தகங்கள், கைடுகள் மற்றும் எழுதுப்பொருட்கள், ஸ்கூல் பேக்குகள், டிபன் கேரியர்கள் போன்றவை விற்பனையும் களை கட்டத் தொடங்கியுள்ளன. சிவகாசி, மதுரை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து நோட்டு புத்தகங்கள், நெல்லையில் உள்ள ஸ்டேஷனரி கடைகளில் குவிந்து வருகின்றன. ஆனால் இவற்றின் விலை கடந்த ஆண்டை விட 10 சதவீதம் அதிகரித்துள்ளது.

கொரோனா காலத்தின்போது ஸ்டேஷனரி மற்றும் நோட்டு புத்தகங்களின் தேவை வெகுவாக குறைந்தது. ஆனால் கடந்த ஆண்டு



நேரடி வகுப்புகள் தொடங்கிய போது நோட்டு புத்தகங்களின் தேவை உயர்ந்தது. 2 ஆண்டுகளுக்கு பிறகு கடந்த ஆண்டு 20 முதல் 30 சதவீதம் வரை நோட்டு புத்தகங்கள் விலை உயர்ந்தது. இந்த நிலையில் தற்போது புதிய கல்வியாண்டிற்கு சராசரியாக 10 சதவீதம் வரை நோட்டு புத்தகம் விலை உயர்ந்துள்ளது. 400 பக்கம் கொண்ட 'லாங் சைஸ்' நோட்டு புத்தகம் 200 ரூபாயில் இருந்து ரூ.225ஆக உயர்ந்துள்ளது. மற்ற நோட்டுகளின் விலையும் 10 சதவீதம் உயர்ந்துள்ளது. நோட்டு புத்தகங்கள் மட்டுமின்றி உரைநடை (கைடு) புத்தகங்கள் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து நோட்டு புத்தக வியாபாரிகள் கூறுகையில், '9 முதல் 10ம் வகுப்பு மாணவர்களுக்கு உரிய கைடு நூல்கள் விலை கடந்த 2 ஆண்டாக உயர்ந்து வருகிறது. முன்னர் 500 ரூபாயில் அனைத்து பாடங்களுக்கும் உள்ள உரைநடை (கைடு) புத்தகங்களை வாங்கும் அளவிற்கு பட்ஜெட் விலை இருந்தது. இப்போது ஒரு உரைநடை பாடப்புத்தகமே 500 ரூபாயை நெருங்கியுள்ளது. குறிப்பிட்ட நிறுவனங்களின் பெயர்களில் உள்ள உரைநடை நூல்களுக்கு வரவேற்பு உள்ள நிலையில் விலையும் உயர்ந்துள்ளது. விலை குறைவாக உள்ள உரைநடை நூல்களில் உள்ள தாள்களின் தரம் சற்று குறைவாகவே உள்ளது. ஸ்டேஷனரி பொருட்கள் விலையில் பெரிய மாற்றம் இல்லை, தற்போதுவரை கடந்த ஆண்டு விலையிலேயே விற்பனைக்கு வந்துள்ளன,' என கூறினார்.

## அமெரிக்காவின் கொலரோடா மாகாணத்தில் பட்டமளிப்பு விழாவில் கால் தவறி விழுந்த அமெரிக்க அதிபர்



வாஷிங்டன், ஜுன். 3–

அமெரிக்காவின் கொலரோடா மாகாணத்தில் விமானப்படை பயிற்சி முடித்தவர்களுக்கு பட்டம் வழங்கும் விழா நடந்தது. இதில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பங்கேற்க வந்தார். அவரை பேச நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்தனர். உடனே பேச எழுந்த பைடன் கால் தவறி கீழே விழுந்தார்.

உடனே அருகிலிருந்த விமானப்படை வீரர்கள் அவரை கைத்தாங்கலாக தூக்கினர். இதுதொடர்பான புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அதன்பின், அதிகாரிகளின் உதவி ஏதுமின்றி, அவர் நடந்து சென்று தமது இருக்கையில் அமர்ந்தார். இந்த சம்பவத்தில் அவருக்கு காயம் ஏற்படவில்லை.

நலமாக உள்ளார் என வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் தெரிவித்தார். விழா மேடையில் போடப்பட்டிருந்த மணல் மூட்டை ஒன்றை மிதித்தபோது கால் தடுமாறி அதிபர் ஜோ பைடன் கீழே விழுந்ததாக தகவல் தெரிவிக்கப்பட்டது. விழாவில் அதிபர் ஜோ பைடன் விமானப்படை பயிற்சி முடித்தவர்களுக்கு பட்டமளித்ததுடன், கைகுலுக்கி பாராட்டும் தெரிவித்தார்.

03.06.2023 ❖ வரலாறு

# பேரளம் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் மத்திய மந்திரியை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்



*பேரளம், ஜூன்-03:*

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் ஒன்றியம், பேரளம் கடைவீதியில் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் மத்திய மந்திரி பிரிஜ் பூஷனை கண்டித்து ஒன்றிய செயலாளர் பாலா தலைமையில் கண்டன கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பேரளம் இந்திய ஜனநாயக வாலிபர் சங்க அலுவலகத்திலிருந்து பேரணியாக கோஷங்கள் எழுப்பியவாறு நடந்து வந்து கடைவீதி பேருந்து நிறுத்தம் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், இந்திய மல்யுத்த வீராங்கனைகளை பாலியல் தொந்தரவு செய்த பிஜேபி மத்திய மந்திரி பிரிஜ் பூஷனை கைது செய்யவும், அவரை கைது செய்யாத பாரதிய ஜனதா அரசை கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் கைது செய்யும் வரை தொடர் போராட்டங்கள் நடைபெறும் என்று தெரிவித்தனர். இதில் ஒன்றிய துணை செயலாளர் சக்திவேல், சூர்யா, ரஞ்சித் மற்றும் இந்திய வாலிப சங்க பொறுப்பாளர்கள் பலர் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர்.

# சென்னையில் குடிநீர் தடுப்பாடு ஏற்பட வாய்ப்பு இல்லை: அமைச்சர் கே.என்.நேரு

சென்னை , ஜூன். 3-

"குடி தண்ணீரைப் பொறுத்தவரை, பாதுகாப்பான முறையில்தான் உள்ளது. மழைக் காலம் வரும் வரை, சென்னைக்கு போதுமான அளவுக்கு தேவையான தண்ணீர் உள்ளது. எனவே, குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு இல்லை" என்று நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு கூறியுள்ளார்.

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் கீழ், குடிநீர் வாரிய பயிற்சி மையத்தில், கழிவுநீர் நீர் சேகரிப்பு தொட்டியிலிருந்து கழிவுநீரை இயந்திரங்களை கொண்டு பாதுகாப்பான முறையில் சுத்தம் செய்யும் பணிகளை மேற்கொள்வது குறித்து கழிவுநீர் லாரிகளை இயக்குபவர்களுக்கான பயிற்சியினை அமைச்சர் கே.என்.நேரு வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.

மேலும் கழிவுநீரை இயந்திரங்களை கொண்டு பாதுகாப்பான முறையில் சுத்தம் செய்யும் பணிகளை மேற்கொள்வது குறித்த பயிற்சி கையேட்டினையும் வெளியிட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியது: "ஜல்ஜீவன் திட்டத்தை திறம்பட செயல்படுத்தியதற்காக, இந்திய அளவில் முதல் மாநிலம் என்ற விருதினை மத்திய அரசு தமிழக அரசுக்கு வழங்கியுள்ளது. செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து சென்னைக்கு குழாய் பதிக்கும் பணி ஒன்று நடைபெற்று வருகிறது. இந்தப்பணி நிறைவு பெற்றால், சென்னைக்கு 1200லிருந்து 1300 எம்எல்டி தண்ணீர் கொடுத்துவிடலாம்.

ஏற்கெனவே வடசென்னை பகுதியில் உள்ள குழாய்களை எல்லாம் மாற்றுவதாக கூறி, அந்தக் குழாய்கள் எல்லாம் மாற்றும் பணி நடைபெற்று வருகிறது. குழாய்கள் பதித்து 50-60 வருடங்கள் ஆகிவிட்டதால், சில இடங்களில் பழுது ஏற்பட்டுள்ளது. பழுது எந்தெந்தப் பகுதிகளில் உள்ளதோ, அவையெல்லாம் மாற்றப்பட்டுத்தான் வருகிறது. அதை தொடர் பணியாகத்தான் செய்துகொண்டு வருகிறோம்.

சென்னையில் குடிதண்ணீரைப் பொருத்தவரை, பாதுகாப்பான முறையில்தான் உள்ளது. மழைகாலம் வரும்வரை போதுமான அளவுக்கு சென்னைக்கு தேவையான தண்ணீர் உள்ளது. எனவே, சென்னையில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு இல்லை" என்று அவர் கூறினார்.

# அறந்தாங்கி அரசு போக்குவரத்து பணிமனை முன்பாக வேகத்தடை அமைக்க போக்குவரத்து தொழிலாளர்கள் வேண்டுகோள்



*அறந்தாங்கி,ஜூன்.3-*

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் இருந்து பட்டுக்கோட்டை செல்கின்ற வழியில் அரசு போக்குவரத்து பணிமனை நீண்ட காலமாக இயங்கி வருகிறது, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து பணிமனை முன்பாக அரசு வேகத்தடை அமைத்துக் கொடுத்திருக்கிறது ஆனால் அறந்தாங்கி பனிமனை முன்பாக வேகத்தடை இல்லை. இதனால் அந்தப் பணிமனையில் வேலை செய்த அரசு ஊழியர் இளமுருகன் என்பவர்பனிமலையில் வேலை செய்துவிட்டு வெளியே வரும்பொழுது விபத்துக்குள்ளாகி அதே இடத்தில் இறந்துள்ளார்.

அதேபோல பல ஊழியர்கள் அடிபட்டு கைகால் முறிந்து வேலை செய்ய முடியாமல் விஆர்எஸ் கொடுக்கப்பட்டு வீட்டில் இருக்கின்றார்கள். இந்த நிலையில் அடிக்கடி பணிமனை முன்பாக விபத்து நடக்கின்ற காரணத்தினால் அரசு போக்குவரத்து கழக ஊழியர்கள் தினம் தோறும் இரவு பகலாக வேலை செய்துவிட்டு வெளியே வரும் பொழுதும், உள்ளே செல்லும் பொழுதும் நெடுஞ்சாலையில் விபத்துக்குள்ளாகி இறப்பதும் உடல் உறுப்புகள் சேதம் அடைவதும் தொடர்கதையாகஇருந்து வருவதாக பணிமனை ஊழியர்கள் வருத்தம் தெரிவிக்கிறார்கள்.

எனவே போக்குவரத்து துறை அதிகாரிக்கு பலமுறை மனு கொடுத்தும் எந்த ஒரு நடவடிக்கையும் இல்லை என்று வருத்தம் தெரிவிக்கின்றனர். எனவே அரசு ஊழியர்களின் போக்குவரத்து துறை ஊழியர்களின் நலம் கருதி உடனடியாக அறந்தாங்கியில் இருக்கின்றபோக்குவரத்து பணிமனை முன்பாக வேகத்தடை அமைக்க வேண்டும் என்பது ஒட்டுமொத்த அரசு போக்குவரத்து ஊழியர்களின் கோரிக்கையாக இருக்கிறது .

# கரூரில் 8 நாட்களாக நடைபெற்ற வருமான வரித்துறை சோதனை நிறைவு



*சென்னை, ஜூன்.3-*

கரூரில் வரி ஏய்ப்பு தொடர்பாக கடந்த 26-ந்தேதி 10-க்கும் மேற்பட்ட இடங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது கரூரில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனைக்கு தி.மு.க.வினர் எதிர்ப்புதெரிவித்தனர். வருமான வரித்துறை அதிகாரிகள் வந்த கார் சேதப்படுத்தப்பட்டது. அதிகாரிகளும் முற்றுகையிடப்பட்டனர். இதனால் அதிகாரிகள் சோதனை செய்யாமல் சென்று விட்டனர். இதனையடுத்து மத்திய பாதுகாப்பு படை பாதுகாப்புடன் தொடர்ந்து கரூரில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

இந்த சோதனையின் போது ஒருசில இடங்களுக்கு வருமான வரித்துறையினர் சீல் வைத்தனர். மேலும் ஒருவருக்கு நேரில் ஆஜராக சம்மன் அனுப்பினர். இந்நிலையில் 8-வது நாளாக இன்றும் கரூரில் பல்வேறு பகுதிகளில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். இந்த சோதனையின் போது துப்பாக்கி ஏந்திய மத்திய பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்தனர். இந்த சோதனையில் 20-க்கும் மேற்பட்ட வருமான வரித்துறை அதிகாரிகள் ஈடுபட்டனர். இந்த நிலையில், 8 நாட்களாக நடைபெற்ற வருமான வரித்துறை சோதனை நேற்று நிறைவு பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காரைக்கால் மாவட்டத்தில் துணை மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம்



*காரைக்கால் ,ஜூன்.3-*

காரைக்கால் மாவட்டம் திருநள்ளார் சாலையில் விபத்து ஏற்பட்டு கல்லூரி மாணவன் இறந்ததை முன்னிட்டு நேற்று துணை மாவட்ட ஆட்சியர் ஜான்சன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் துணை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பயிற்சி கலெக்டர் சம்யக் எஸ். ஜெயின் மற்றும் காவல் கண்காணிப்பாளர் சுப்பிரமணியன் அரசு மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர். கண்ணகி மற்றும் உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி டாக்டர். மதன்பாபு நலவழித்துறை துணை இயக்குனர் டாக்டர். சிவராஜ்குமார் மற்றும் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி அங்காளன் மற்றும் ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள் உள்ளிட்டவர்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பேசிய துணை மாவட்ட ஆட்சியர் விபத்து ஏற்பட்ட உடனே சரியான நேரத்திற்கு செல்லாத ஆம்புலன்ஸ் ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்தார்.

இது போன்ற விபத்துகளை தவிர்ப்பதற்காக காரைக்காலில் அந்தந்த கொம்யூனிலும் மொபைல் ஆம்புலன்ஸ் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார். மேலும் ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள் பொறுப்புடனும் கவனமுடன் செயல்பட வேண்டும் எனவும் அனைவரையும் ஒருங்கிணைத்து ஒரு ஆலோசனை கூட்டம் நடத்தப்படும் எனவும் துணை ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

மேலும் இரு சக்கர வாகனத்தில் செல்வோர் மிகவும் கவனமுடன் அதிவேகத்தில் செல்லாமல் செல்ல வேண்டும் எனவும் லாரிஓட்டுனர்கள் கவனமுடன் செயல்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

# அடுத்த 3 நாட்களுக்கு வெயில் அலர்ட் கர்ப்பிணிகள், முதியோர்கள், குழந்தைகள் வெளியே வராதீங்க

சென்னை, ஜூன். 3-

தமிழ்நாட்டில் அடுத்த மூன்று நாட்களுக்கு வெயில் கொளுத்தி எடுக்கும் என்று வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜூன் 4ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை 2-3 டிகிரி செல்சியஸ் உயர வாய்ப்புள்ளது. சில இடங்களில் 41 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் பதிவாகும். எனவும் எனவே, வெயில் நேரத்தில் குழந்தைகள், கர்ப்பிணிகள், முதியோர்கள் வெளியே வர வேண்டாம். அப்படி வெளியே சென்றாலும் அடிக்கடி தண்ணீர், மோர் போன்றவற்றை குடிக்க வேண்டும் என தெரிவித்து உள்ளனர்.



முன்னாள் முதலமைச்சர் கலைஞர் நூறாவது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை தண்டையார்பேட்டை மண்டல குழு தலைவர் நேதாஜி யு கணேசன் ஏற்பாட்டில் தண்டையார்பேட்டை நேதாஜி சிலை அருகே மறைந்த முன்னாள் முதலமைச்சர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு ஆர்கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜேஜே எபினேசர் மற்றும் சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் இளைய அருணா உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதனையடுத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் காலை சிற்றுண்டி வழங்கி கொண்டாடினர். நிகழ்ச்சியில் மேற்கு பகுதி செயலாளர் ஜெபதாஸ் பாண்டியன், ஏ. டி. மணி, எஸ். கிருஷ்ணன், கே. சி. ராஜா, பா தேவராஜ், எஸ். எல். சுந்தர்,விமலா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்



உத்திரமேரூர் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள பிரபல நடுத்தெரு ஸ்ரீமாரியம்மன் ஆலயத்தில் நேற்று அம்மனுக்கு அலங்காரம் விசேஷ பூஜை நடைபெற்றது.



சுத்தமான இந்தியா பசுமையான பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தின் ஒன்பதாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு துணை மாவட்ட ஆட்சியர் தலைமையில் உறுதிமொழி ஏற்பு பூமியையும் அதன் இயற்கை சூழலையும் பாதுகாக்க என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன் என்றும் வீண் விரயத்தைக் குறைக்கும் இதுபோன்ற நடைமுறைகளையும் நான் பின்பற்றுவேன் எனவும் நான் பயன்படுத்தியதை மீண்டும் பயன்படுத்துவேன் எனவும் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை தவிர்ப்பேன் என்றும் பிளாஸ்டிக் பைகளுக்கு பதிலாக பேப்பர் பைகள், துணி பைகளை பயன்படுத்துவேன் எனவும் சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருப்பேன் எனவும் நாம் உருவாக்கும் கழிவுகளை குறைத்துக் கொள்வேன். அதிக மரங்களை நடுவேன் நான் ஆற்றலையும் தண்ணீரையும் சேமிப்பேன் எனவும் துணை மாவட்ட ஆட்சியர் ஜான்சன் தலைமையில் பயிற்சி கலெக்டர் சம்யக் எஸ். ஜெயின் ,காவல் கண்காணிப்பாளர் (தெற்கு) சுப்பிரமணியன் நலவழித்துறை துணை இயக்குனர் டாக்டர். சிவராஜ்குமார் அரசு மருத்துவமனை மருத்துவ அதிகாரி டாக்டர். கண்ணகி உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி டாக்டர் மதன் பாபு உள்ளிட்ட அரசு அதிகாரிகள் ஊழியர்கள் உறுதிமொழியை ஏற்றுக்கொண்டார்கள்.

# தென்கொரியாவில் நடந்த தடகள போட்டிகளில் அசத்திய டாக்டர் விஜயா



சென்னை, ஜூன்,3

ஜியோன்புக் என்று அழைக்கப்படும் ஆசியா பசிபிக் மாஸ்டர்ஸ் விளையாட்டு போட்டிகளின் இரண்டாவது பதிப்பு ஆண்டு தோறும் நடைபெற்று வருகிறது.

2023ம்ஆண்டிற்கான இந்த போட்டி கடந்த மே மாதம் 12ம் தேதி முதல் 20தாம் தேதி வரையில் தென்கொரியாவில் நடந்தது. இந்த போட்டிகளுக்கு இண்டர்நேஷனல் மாஸ்டர்ஸ் கேம்ஸ் அசோசியேஷன் ஏற்பாடு செய்திருந்தது.

26பிரிவுகளில் நடைபெற்ற இந்த போட்டியில் 13ஆயிரம் வீரர் ,வீராங்கனைகள் பங்கேற்றனர். இந்தியாவின் சார்பில் டாக்டர் விஜயா தடக்கள போட்டிகளில் கலந்து கொண்டு அசத்தினார்.ஐம்பது வயதை கடந்த மகளிர்கான 100மீட்டர் 200மற்றும்400மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்ட டாக்டர் விஜயா மூன்று சில்வர் பதக்கங்களை வென்று அசத்தினார்.

இந்த சாதனை குறித்து கருத்து தெரிவித்த டாக்டர் விஜயா கடந்த 2021ம் ஆண்டு சென்னையில் நடந்த சென்னை மாஸ்டர்ஸ் தடக்கள போட்டிகளில் கலந்து கொண்டு ஒரு தங்கம் மற்றும் வெள்ளி பதக்கம் வென்றேன் பின்னர் மாநில அளவில் நடந்த போட்டியில் கலந்து கொண்டு மூன்று தங்கப் பதக்கம் கைப்பற்றினேன் இதை தொடர்ந்து நடந்த 42வது தேசிய மாஸ்டர்ஸ் தடக்கள போட்டிகளில் இரண்டு தங்கம் மற்றும் ஒரு வெள்ளி பதக்கம் கைப்பற்றினேன் கடந்த 2022ம் ஆண்டு பெங்களூரு நகரில் நடந்த தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்று 100மீட்டர் 200மீட்டர் தடக்கள போட்டிகளில் இரண்டு தங்க பதக்கம் வென்றேன் என தெரிவித்தார்.

# சென்னை திருவொற்றியூரில் வடிவுடையம்மன் கோவில் வளாகத்தில் கழிவறை கட்டப்பட்டுள்ளதை எதிர்த்து ஆர்ப்பாட்டம்



சென்னை, ஜூன்,3

2000 ஆம் ஆண்டுகள் பழமை வாய்ந்த வரலாற்று சிறப்புமிக்க திருவொற்றியூர் அமைந்துள்ள தியாகராஜ சுவாமி வடிவுடையம்மன் கோவிலில் பத்தடி உயரமுள்ள ஆகாச சிவலிங்கம் உள்ளது கோவிலுக்கு வரும் பக்தர்கள் சிறுநீர் கழிக்க சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர் என கூறி கோவில் நிர்வாகம் மாட்டு தொழுவம், ஆகாச லிங்கம் அருகே பக்தர்களுக்கு கழிப்பறை கட்டி உள்ளனர்.

கோவில் வளாகத்திற்குள் கழிப்பறை கட்ட எதிர்ப்பு தெரிவித்து அனைத்து இந்து திருக்கோவில்கள் பாதுகாப்பு கூட்டமைப்பு மாநில தலைவர் சங்கர், மாநில பொதுச் செயலாளர் கோபிநாத் தலைமையில் 50 க்கும் மேற்பட்டோர் திருவொற்றியூர் தியாகராஜ சுவாமி வடிவுடையம்மன் கோவில் நிர்வாக அலுவலரிடம் கழிவறை அகற்றப்பட வில்லை என்றால் கோவில் முன்பு மக்களை கூட்டி ஆர்ப்பாட்டம் செய்யப்படும் என்று தெரிவித்தனர் .

இதனையடுத்து நேற்று தியாகராஜர் சன்னதியில் தியாகராஜர் சாமி சிலையின் முன்பு மனு கொடுத்து சாமி தரிசனம் செய்தனர் பின்பு கோவில் அதிகாரியிடம் புகார் மனு கொடுத்தனர். அதை தொடர்ந்து நுழைவு வாயில் முன்பு கழிவறை காட்டியதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் பின்னர் கலைந்து சென்றனர்

# திருமணமாகி 18 ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லாத விரக்தியில் மீனவர் பூச்சி மருந்து குடித்து தற்கொலை



திருவொற்றியூர், ஜூன்.3

திருவொற்றியூர் பட்டினத்தார் கோவில் தெருவைச் சேர்ந்த 42 வயதுடைய வேலு தனியார் டயர் தொழிற்சாலையில் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்து வருகிறார்

இவர் யமுனா என்ற பெண்ணை கடந்த 18 ஆண்களுக்கு முன்பு திருமணம் செய்து கொண்டார்.

திருமணமாகி 18 ஆண்டுகள் ஆகியும் தனக்கு இதுவரை குழந்தை இல்லாததால் மனவிரக்தியில், நேற்று திருவொற்றியூர் ஒண்டிகுப்பம் கடற்கரையில் பூச்சி மருந்து குடித்து, மீன் பிடிக்கும் வலையில் மீது உயிரிழந்து கிடந்துள்ளார்.

இது குறித்து, தகவலறிந்த திருவொற்றியூர் போலீசார் வேலு உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் இச்சம்பவம் குறித்து திருவொற்றியூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### காரைக்கால் அரசு மருத்துவமனையில் , மருத்துவர் இல்லாததை கண்டித்து

# காங்கிரஸ் கட்சி சார்பில் திடீர் சாலை மறியல், அடிக்கடி நடக்கும் போராட்டத்தால் பரபரப்பு



காரைக்கால், ஜூன்,3

காரைக்கால் மாவட்டம் நிரவி பகுதியில் மூன்று இருசக்கர வாகனங்களில் ஆறு நபர்கள் வந்து கொண்டிருந்தனர், அப்போது பின்னே வந்த கார் ஒன்று மோதியதில் மூன்று இருசக்கர வாகனங்கள் இருந்த ஆறு பேருக்கும் பலத்த காயம் ஏற்பட்டு காரைக்கால் அரசு பொது மருத்துவமனைக்கு கொண்டு வந்தனர். அப்போது அவர்களை பரிசோதித்த செவிலியர்கள் இங்கு எலும்பு முறிவு சார்ந்த மருத்துவர்கள் இல்லை என கூறியுள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த உறவினர்கள், காங்கிரஸ் கட்சி மாவட்டத் தலைவர் சந்திரமோகன் தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் காரைக்கால் மாவட்ட அரசு பொது மருத்துவமனை முன்பு அமர்ந்து திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். சாலை மறியலில் ஈடுபட்டவர்கள் புதுச்சேரி அரசையும் காரைக்கால் பொது மருத்துவமனையும் கண்டித்தும் எலும்பு முறிவு மருத்துவரை நியமிக்க வலியுறுத்தியும் கண்டன முழக்கங்களை எழுப்பினர். சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் பேச்சுவார்த்தை நடத்தியதில் உடன்பாடு ஏற்படாததால்.பின்னர் மருத்துவ உள்ளிருப்பு அதிகாரி மதன்பாபு நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதை அடுத்து சாலை மறியல் கைவிடப்பட்டது.

இரண்டு நாட்கள் முன்புதான் ஆம்புலன்ஸ் தாமதமாக வந்ததால் அரசு பொறியியல் கல்லூரி மாணவன் இறந்ததாக கூறி உறவினர்கள் மற்றும் மாணவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டது குறிப்பிடத்தக்கது. காரைக்கால் மாவட்டத்தில் அரசு பொது மருத்துவமனையில் எலும்பு முறிவு மருத்துவர்கள் இல்லாததை கண்டித்து காங்கிரஸ் கட்சியினர் திடீர் சாலை மறியல் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் பல்வேறு அடிப்படை வசதிகள் மற்றும் மருத்துவர்கள் பற்றாக்குறை இருப்பதால், ஒரு சில குறைபாடுகளால் நாளுக்கு நாள் மருத்துவமனை போராட்ட களமாக மாறி வருகிறது குறிப்பிடத்தக்கது

# புதுக்கோட்டையில் ஆண்டனீஸ் ஸ்போக்கன் இங்லீஸ் அகாடமியின் வெள்ளிவிழா, நூல் வெளியீட்டு விழா

புதுக்கோட்டை, ஜூன்.3-

ஆண்டனீஸ் ஸ்போக்கன் இங்லீஸ் அகாடமியின் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழா மற்றும் பச்சை பூமி அமைப்பின் சார்பில் எழுத்தாளர் ஆண்டனி எழுதிய'பாதுகாப்போம் பச்சை பூமியை' என்ற நூல் வெளியீட்டு விழா புதுக்கோட்டையில் நடைபெற்றது.




விழாவிற்கு கவிஞர் தங்கம் மூர்த்தி தலைமை வகித்தார், விழாவில் கலந்துகொண்டு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நூலை வெளியிட, வல்லத்திராகோட்டை அரசுமேல்நிலைப்பள்ளித் தலைமைஆசிரியர்குமார் பெற்றுக்கொண்டார்.

விழாவில் அமைச்சர் ரகுபதி பேசும்போது, கடந்த 25 ஆண்டுகளாக 10 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்களுக்கு இலவசமாக ஸ்போக்கன் இங்கிலீஸ் வகுப்பு நடத்தி வருபது மிகப்பெரிய சாதனை. மேலும், உலகலாவிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள புவி வெப்பமயமாதலைத் தடுக்கும் ஒருபகுதியாக பச்சைபூமி அமைப்பினர் தொடர்ச்சியாக மாவட்டம் முழுவதும் மரக்கன்றுகளை நட்டுவருவதும் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியது என்றார்.

விழாவிற்கு முன்னிலை வகித்து கந்தர்வகோட்டை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எம். சின்னதுரை, புதுக்கோட்டைத் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, துணை ஆட்சியர் கே.கருணாகரன் ஆகியோர் பாராட்டிப் பேசினர், ஓய்வு பெற்ற முதன்மைக் கல்வி அலுவலர் சாமி. சத்தியமூர்த்தி, திமுக ஒன்றியச் செயலாளர் அரு.வடிவேல், கவிஞர் முத்துப்பாண்டியன், கவிஞர் மு.கீதா, கவிஞர் சு.மதியழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்

முன்னதாக பச்சை பூமிஅமைப்பின்தலைவர் வேங்கை ஆரோன் வரவேற்க,நூல் ஆசிரியர் ஆண்டனி ஏற்புறையும், நன்றியுரையும் வழங்கினார், மைதிலி கஸ்தூரிரங்கன், மாலதி ஆகியோர் நிகழ்ச்சியைத்தொகுத்து வழங்கினர்.

# சேலம் அருகே பட்டாசு ஆலையில் தீ விபத்து : 3 பேர் உடல் சிதறி பலி

சேலம், ஜூன். 3 -



சேலம்அருகேபட்டாசு ஆலையில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 3 பேர் உடல்சிதறி பலியாகினர். 6 பேர் ஆபத்தான நிலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். சேலம் இரும்பாலை பக்கமுள்ள சர்க்கார் கொல்லப்பட்டியை சேர்ந்தவர் சதிஷ்குமார் (41). இவர் அங்குள்ள நாச்சியார் கோயில் பின்பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் நாட்டு வெடி, பட்டாசுகள் தயாரிக்கும் ஆலை வைத்துள்ளார். இங்கு அப்பகுதியை சேர்ந்தவர்கள் வேலை செய்துவருகின்றனர்.நேற்று உரிமையாளர்சதிஷ்குமார் உள்பட 9 பேர் பட்டாசு தயாரிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். மாலை 4 மணியளவில் திடீரென பட்டாசு ஆலை பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது.

இதுகுறித்து 108 ஆம்புலன்சுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. இரும்பாலைபோலீசாரும் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். படுகாயத்துடன் ஆங்காங்கே கிடந்த 6 பேரை மீட்டு சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். உரிமையாளர்சதிஷ்குமார் (41), நடேசன்(50), பானுமதி (40) என 3 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி இறந்து கிடந்தனர். அடையாளம் தெரியாத பெண்ணின் சடலத்தில் தலையை காணவில்லை, மூவரின் சடலங்களை மீட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மஜ்ரா கொல்லப்பட்டியை சேர்ந்த மோகனா(38), வசந்தா(45),மகேஷ்வரி(34) எஸ்.கொல்லப்பட்டியை சேர்ந்த மணிமேகலை (36), பிரபாகரன்(30), பிருந்தா(28) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களுக்கு தீக்காயம் அதிகளவில் இருக்கிறது. அனைவருக்கும் 40 சதவீதத்தில் இருந்து 60 சதவீதம் வரை காயங்கள் உள்ளது.சம்பவஇடத்திற்கு மாநகர போலீஸ் கமிஷனர் விஜயகுமாரி, துணை கமிஷனர்கள் கவுதம்கோபால், லாவண்யா, உதவி கலெக்டர் மாறன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்குதலா ரூ.3 லட்சமும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் 6 பேருக்கு தலா ரூ.50 ஆயிரமும்முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கிடவும் உத்தரவிடப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை மாவட்ட புதிய ஆட்சித் தலைவராக பதவியேற்ற ரம்யா மெர்சியை புதுக்கோட்டை மாவட்ட வர்த்தக கழகத்தின் சார்பில் தலைவர் சதர்ன் எம்.சாகுல் ஹமீது சாந்தம், செயலாளர் சாந்தம் சவரிமுத்து, பொருளாளர் எஸ்.கதிரேசன், கூடுதல் செயலாளர் ஆர்.சம்பத்குமார் துணைத் தலைவர் ராஜா முஹம்மது, இணைச்செயலாளர் சையத் நசீர் சதர்ன் ஆசிப் ஆகியோர் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

முதலமைச்சரின் பல்வேறு திட்டங்களால்

# அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரிப்பு– அமைச்சர் தகவல்

தஞ்சாவூர், ஜூன். 3-



தஞ்சையில் நேற்று பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது, வருகின்ற7-ந்தேதிபள்ளிகள் திறக்கப்படுகிறது. அதற்கு முன்னதாகவேபள்ளிகளை சுத்தப்படுத்துதல், வளாகத்தில் புதர்களை அகற்றுதல் உள்ளிட்ட பல்வேறு முன்னேற்பாடு பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. தனியார் பள்ளி வாகனங்கள் நல்ல முறையில் இயங்குகிறதா? எனவும் அந்தந்த மாவட்டங்களில் ஆய்வு செய்யப்பட்டது. அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கைஅதிகரித்துள்ளது. மே மாதத்தில் மட்டும் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் அரசு பள்ளிகளில் சேர்ந்துள்ளனர்.

7-ந் தேதி பள்ளிகள் திறக்கப்பட்ட பிறகு எத்தனை மாணவர்கள் சேர்ந்துள்ளனர் என்கிற முழு விவரம் தெரியவரும். முதலமைச்சரின் வானவில் மன்றம், புதுமைப்பெண் உள்ளிட்ட பல்வேறு நல்ல திட்டங்களால் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை ஆண்டுதோறும் அதிகரித்துள்ளன. கடந்த 2 ஆண்டுகளில் 11 லட்சம் மாணவர்கள் சேர்ந்துள்ளனர். வட மாவட்டங்களில் தேர்ச்சி சதவீதத்தை அதிகரிக்க அந்தந்த முதன்மை கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது. ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிதி நிலைமைக்குதகுந்தாற்போல் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று கூறினார்.

# பேஸ்புக் காதலால் விபரீதம் சிறுமியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்து காரில் இருந்து வீசிய கும்பல்

அகர்தலா ,ஜூன். 3-




அப்போது, சிறுமியுடன் அந்த இளைஞனும் சந்தித்துள்ளனர். பின்னர் சிறுமியுடன் வலுக்கட்டாயமாக அந்த இளைஞர் செல்போனில் புகைப்படம் எடுத்துள்ளார். பின்னர் தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அந்த சிறுமி அங்கிருந்து தப்பி செல்ல முயற்சித்துள்ளார். ஆனால், அந்த சிறுமியை பூங்காவில் உள்ள வனப்பகுதிக்கு அழைத்து சென்று அங்கு பாலியல் வன்கொடுமை செய்துள்ளான். அந்த இளைஞனுடன் வந்த மேலும் 2 பேரும் சிறுமியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.

பின்னர், சிறுமியை காரில் ஏற்றி சென்ற அந்த 3 பேரும் ராஜர்பக் பகுதியில் வந்தபோது ஓடும் காரில் இருந்து சிறுமியை வீசிவிட்டு தப்பிச்சென்றனர். கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சிறுமி பின்னர் வீடு திரும்பிய நிலையில் தனக்கு நேர்ந்த கொடூரம் குறித்து குடும்பத்தினரிடம் கூறியுள்ளார். இதை கேட்டு அதிர்ச்சியடைந்த குடும்பத்தினர் உடனடியாக போலீசில் புகார் அளித்தனர். புகார் அடிப்படையில் வழக்குபதிவு செய்த போலீசார்சிறுமியைகூட்டு பாலியல் வன்கொடுமை செய்தபேஸ்புக்இளைஞரை கைது செய்தனர், இந்த சம்பவத்தில் தொடர்புடைய மேலும் 2 பேர் தலைமறைவாக உள்ள நிலையில் அந்த நபர்களைதேடும்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

# சவுதி கட்டிடக் கலை நிபுணரை மணந்த ஜோர்டான் இளவரசர்

அம்மான் , ஜூன். 3-



ஜோர்டான் நாட்டு இளவரசர், சவுதியின் கட்டிடக் கலை நிபுணர் ஒருவரை திருமணம் செய்துகொண்டது வளைகுடா நாடுகளில் பேசும் பொருளாகி உள்ளது.

ஜோர்டானின் இளவரசர் ஹூசைன் (28) -சவுதியின் கட்டிடக்கலை கலை நிபுணர் ராஜ்வா அல்சைஃப் (29) திருமணம் பிரமாண்டமாக நடைபெற்றது. தலைநகர் அம்மானில் நடைபெற்ற இந்தத் திருமணமத்தில் உலகப் பிரபலங்கள், அரசக் குடும்பங்கள் என பலரும் கலந்துகொண்டனர். இளவரசரின் திருமணத்தை முன்னிட்டு நேற்று ஜோர்டானில் அரசு விடுமுறை விடுக்கப்பட்டு, அரசு தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் செய்யப்பட்டது.

இந்தத் திருமணம் ஜோர்டான் - சவுதி இடையே அரசியல் ரீதியிலான உறவை மேலும் மேம்படுத்தும் என்பதால் கூடுதல் கவனத்துடன் வளைகுடா நாடுகள் இந்த நிகழ்வை உற்று கவனிக்கின்றன.

திருமணம் முடித்த பின் இளவரசரையும், அவரது மனைவியையும் வீதிகளில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் கொடியசைத்து வரவேற்றனர்.

வறுமையும் கல்வியறிவின்மையும் நிரம்பிவழியும் நாடுகளில் ஒன்று ஜோர்டான். 1.1 கோடி மக்களை கொண்ட ஜோர்டானில் மன்னராட்சிமுறைநீண்ட காலமாக வழக்கத்தில் உள்ளது. மன்னராட்சி குறித்த விமர்சனங்கள் பரவலாக இருந்தாலும், பெரும்பான்மையான ஜோர்டான் மக்கள் மன்னராட்சி முறையை ஆதரித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மின் இணைப்பு கேபிள் ஒயர்கள் திருட்டு தமாகா கோரிக்கை

கரம்பக்குடி , ஜூன். 3-

ஆழ்துளை கிணறு மூலம் விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் கேபிள் ஒயர்கள் தொடர்ந்து திருடப்படுவதை தடுக்க தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் மாவட்ட நிர்வாகத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அக்கட்சியின் விவசாய அணி மாநில தலைவர் துவார் ரெங்கராஜன் எடுத்துள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அடுத்த மழையூர் காவல் எல்லைக்கு உட்பட்ட கிராமங்களில் தொடர்ந்து விவசாய ஆழ்துளை கிணறு மூலம் விவசாயம் செய்யும் விவசாயிகளில் மின் இணைப்பு கேபிள் ஒயர்களை சிலர் திருடுவது தொடர்கதையாகி வருகிறது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால் புகாரை பெற்றுக் கொண்டு மனு ரசீது கொடுக்க மறுக்கின்றனர். தொடர்ந்து குற்றச் செயலில் ஈடுபடும் நபர்கள் மீது மாவட்ட நிர்வாகம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# காரைக்குடி அருகே திமுக, பாஜக நிர்வாகிகள் இணைந்து காங். எம்எல்ஏ மனைவிக்கு எதிராக போராட்டம்



காரைக்குடி ,ஜூன்.3-

காரைக்குடி அருகே திமுக,பாஜகநிர்வாகிகள் இணைந்து காங்கிரஸ் எம்எல்ஏ மனைவிக்கு எதிராக போராட்டம் செய்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

காரைக்குடி அருகே சங்கராபுரம் ஊராட்சித் தலைவராக காங்கிரஸ் எம்எல்ஏ மாங்குடி மனைவி தேவி உள்ளார். ஊராட்சித் துணைத் தலைவராக திமுக மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பாண்டியராஜன் உள்ளார். இந்நிலையில், ஊராட்சித் தலைவர் தேவிக்குஎதிராகதுணைத் தலைவர்பாண்டியராஜன் தலைமையில் பெரும்பாலான வார்டு உறுப்பினர்கள்ஊராட்சிக் கூட்டத்தை தொடர்ந்து நடத்தவிடாமல் புறக்கணித்து வருகின்றனர். இதனால் வளர்ச்சித் திட்டப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் துணைத் தலைவர் பாண்டியராஜன், பாஜக முன்னாள் எம்எல்ஏ சோழன் சித. பழனிசாமி தலைமையில் ஏராளமானோர் அடிப்படை வசதிகளை செய்து கொடுக்காத ஊராட்சித் தலைவரை கண்டித்து சங்கராபுரம் ஊராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

அவர்களிடம் இன்ஸ்பெக்டர் ரவீந்திரன் மற்றும் ஊரகவளர்ச்சித்துறை அலுவலர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். ஜூன் 6-ம் தேதி வட்டாட்சியர் தலைமையில் சமாதானக் கூட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டதை அடுத்து போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

இதுகுறித்து துணைத் தலைவர்பாண்டியராஜன் கூறுகையில், ''ஊராட்சியில் எந்த அடிப்படை வசதியும் செய்து கொடுக்கவில்லை. ஊராட்சித் தலைவர் தனக்கு வேண்டாதவர்களுக்கு வீட்டு வரி ரசீது கொடுப்பதில்லை. இதனால் மக்கள் பாதிக்கப்பட்டனர். இதுகுறித்து மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை'' என்று கூறினார்.

இது குறித்து தேவி கூறுகையில், ''பிப்ரவரியில் தான் ஊராட்சித் தலைவராக பொறுப்பேற்றேன். துணைத் தலைவர் தனது சுயலாபத்துக்காக தொடர்ந்து ஊராட்சிக் கூட்டங்களை புறக்கணித்து வருகிறார். தற்போது ஆட்களை திரட்டி போராட்டம் நடத்துகிறார். திமுக நிர்வாகி மாற்றுக் கட்சியினருடன் சேர்ந்து நிர்வாகத்தை நடத்த விடாமல் தடுக்கிறார். இதுகுறித்து முதல்வரிடம் புகார் தெரிவிக்க உள்ளேன்'' என்று கூறினார்.

# மெக்சிகோவில் மனித உடல் உறுப்புகளுடன் 45 பைகள் கண்டெடுப்பு போலீஸ் விசாரணை

மேற்கு மெக்சிகோ , ஜூன். 3-



ஜலிஸ்கோ பகுதியில் உள்ள பள்ளத்தாக்கில் மனித உடல் உறுப்புகளுடன் குறைந்தது 45 பைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக போலீஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த மே மாதம் 20ம் தேதி முதல் காணாமல் போன 30 வயது மதிக்கத்தக்க இரண்டு பெண்கள் மற்றும் ஐந்து ஆண்கள் என 7 பேரை தேடும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டு வந்தனர். இவர்கள் 7 பேரும் வெவ்வேறு நாட்களில் காணாமல் போனதும், ஆனால் இவர்கள் 5 பேரும் ஒரே கால் சென்டர் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தது புலனாய்வு விசாரணையில் தெரியவந்தது. இந்நிலையில், பெரிய தொழில்துறை மையமான குவாடலஜாராவின் புறநகர்ப் பகுதியில் ஜபோபன் நகராட்சியில் 40 மீட்டர் (120 அடி) பள்ளத்தாக்கின் அடிப்பகுதியில் கடந்த செவ்வாய்கிழமை அன்று மனித உடல் உறுப்புகள் கொண்ட 45 பைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதுகுறித்து போலீஸ் அதிகாரிகள் கூறுகையில், "45 பைகளில் ஆண் மற்றும் பெண் இருபாலருக்கும் சொந்தமான மனித உடல் உறுப்புகள் இருந்தன. தடயவியல் நிபுணர்கள் மனித உறுப்புகளின் அடையாளங்கள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர். ஆனால், இவை கண்டுபிடிக்கப்பட்ட அதே பகுதியில்தான் சம்பந்தப்பட்ட கால் சென்டரும் இயங்கி வருகிறது. இதன் முதற்கட்ட விசாரணையில்,கால் சென்டர் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டிருக்கலாம் என தெரிகிறது. மேலும், இதுதொடர்பான முக்கிய ஆவணங்களையும் அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களை குற்றவாளிகளாக மாற்ற கால் சென்டர் நிறுவன அதிகாரிகள் முயல்வதாக காணாமல் போனவர்களின் உறவினர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். மேற்கொண்டு விசாரணை நடத்தி வருகிறோம்" என்றார். இதுபோன்று கடந்த 2021ம் ஆண்டில் ஜாலிஸ்கோவில் உள்ள டோனாலா நகராட்சியில், 11 பேரின் மனித உடல் உறுப்புகளுடன் சுமார் 70 பைகள் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் 2019ம் ஆண்டில், ஜபோபனின் மக்கள்தொகை இல்லாத பகுதியில் 119 பைகளில்29பேரின்உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

# ஜூலை 1 முதல் 200 யூனிட் மின்சாரம் இலவசம் கர்நாடக முதல்வர் சித்தராமையா அறிவிப்பு

பெங்களூரு , ஜூன். 3-



கர்நாடகா சட்டசபை தேர்தலின் போது காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. வீடுகளுக்கு 200 யூனிட் மின்சாரம் இலவசம், பெண்களுக்கு இலவச பேருந்து பயணம், குடும்ப தலைவிகளுக்கு ரூ.2000, இளைஞர்களுக்கு நிதி உதவி, 10 கிலோ இலவச அரிசி உள்ளிட்ட அறிவிப்புகள் பெரும் வரவேற்பைப் பெற்றன. கர்நாடகா தேர்தலில் காங்கிரஸ் கட்சி 135 இடங்களில் வெற்றி பெறுவதற்கு தேர்தல் அறிக்கை முக்கிய காரணமாக இருந்தது.

இந்த வாக்குறுதிகள் அனைத்தும் ஆட்சிக்கு வந்த உடன் முதல் அமைச்சரவை கூட்டத்திலேயே முடிவு செய்யப்பட்டு அமல்படுத்தப்படும் என்பதும் காங்கிரசின் வாக்குறுதி. அதன்படி, வரும் 11-ந்தேதி முதல் அரசு பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யலாம் என்று முதல்வர் சித்தராமையா அறிவித்துள்ளார். மேலும், ஜூலை 1-ந்தேதி முதல் 200 யூனிட் இலவச மின்சாரம், வேலையில்லா பட்டதாரிகளுக்கு விரைவில் உதவித்தொகை வழங்கப்படும். ஆகஸ்ட் 15-ந்தேதி முதல் குடும்ப தலைவிகளுக்கு ரூ.2000 வழங்கப்படும் என கூறியுள்ளார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# கோகுல்ராஜ் வழக்கு: யுவராஜ் உள்ளிட்ட 10 பேருக்கு வழங்கப்பட்ட தண்டனை உறுதி

# ஜூலை 1 முதல் 200 யூனிட் மின்சாரம் இலவசம் கர்நாடகா முதல்வர் அறிவிப்பு





# மெக்சிகோவில் மனித உடல் உறுப்புகளுடன் 45 பைகள் கண்டெடுப்பு


| சென்னை / புதுக்கோட்டை | 03.06.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

மு. கருணாநிதி , தமிழ்நாட்டின் 3-வது முதலமைச்சர், தமிழறிஞர், எழுத்தாளர் (பி.1924) (இ.2018)



ஜார்ஜ் பெர்னாண்டஸ் , இந்திய அரசியல்வாதி (பி.1930) (இ.2019)



தங்கம் தென்னரசு , தமிழக அரசியல்வாதி (பி.1966)



## இன்றைய நினைவு நாள்

இரா. திருமுருகன் , தமிழறிஞர் (பி.1929) (இ.2009)



பஜன்லால் , அரியாணாவின் 6வது முதலைமைச்சர் (பி.1930) (இ.2011)



கோபிநாத் முண்டே , இந்திய-மகராட்டிர அரசியல்வாதி (பி.1949) (இ.2014)



## உலக மிதிவண்டி நாள்